சின்ன சின்னதாய்

● குன்னூர் அருகே வெலிங்டன் முப்படை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி சார்பில், மாற்றுத்திறன் கொண்ட சிவில் பாதுகாப்பு ஊழியர்களுக்கு மறுவடிவமைக்கப்பட்ட இருசக்கர வாகனங்களை வழங்கிய கல்லூரி கமாண்டன்ட் லெப்டினன்ட் ஜெனரல் வீரேந்திர வாட்ஸ்.

சிவில் பாதுகாப்பு ஊழியர்களுக்கு மறு வடிவமைப்பு இருசக்கர வாகனங்கள்

■ குன்னூர்

குன்னூர் அருகே வெலிங்டன் முப்படை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் உள்நாடு மட்டுமின்றி, நட்பு நாடுகளின் முப்படை இளம் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு 80–வது குழுவினர் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். இக்கல்லூரியின் நிறுவன தினத்தை முன்னிட்டு, எலும்பியல் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், மறுவடிவமைக்கப்பட்ட இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட்டன.

இவற்றை, கல்லூரி கமாண்டன்ட் லெப்டினன்ட் ஜெனரல் வீரேந்திர வாட்ஸ் வழங்கினார்.

● பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அம்பேத்கர் உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்திய பதிவாளர் ரூபா குணசீலன் உள்ளிட்டோர்.

அம்பேத்கர் பிறந்த தினம் கொண்டாட்டம்

■ கோவை

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் அம்பேத்கரின் 134–வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) ரூபா குணசீலன் அம்பேத்கர் உருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் பல்கலைக்கழக நிதி அலுவலர் என்.முருன், எஸ்சி, எஸ்டி சங்க செயலாளர் செல்வன், பாரதியார் பல்கலைக்கழக அலுவலர் சங்க பொருளாளர் பில்லப்பன் மற்றும் துறை தலைவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

● கோத்தகிரி நகராட்சிக்கு உட்பட்ட ரைபிள்ரேஞ்ச் பகுதியில் அதிகளவில் கொட்டப்பட்டுள்ள கட்டிடக்கழிவுகள்.

கோத்தகிரி ரைபிள்ரேஞ்ச் பகுதியில் குப்பை போராட்டம் நடத்த பொதுமக்கள் முடிவு

■ கோத்தகிரி

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி நகர மக்களின் முக்கிய நீராதாரமாக ரைபிள்ரேஞ்ச் விளங்குகிறது. நகரின் பாதியளவு தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. குடியிருப்புகள், கட்டுமானம், புதிய சாலை என சதுப்பு நிலங்கள் சமீப காலமாக சுருங்கி வருகின்றன. மேலும், கட்டுமானக் கழிவுகள் உட்பட பல்வேறு வகையான குப்பைகளை, ரைபிள்ரேஞ்ச் சதுப்பு நிலத்தில் கொட்டுவதால் தண்ணீர் மாசடைந்து வருகிறது.

இதுகுறித்து கோத்தகிரி லாங்வுட் சோலை பாதுகாப்புக் குழு செயலாளர் கே.ஜே.ராஜூ கூறும்போது, “ரைபிள்ரேஞ்ச் சதுப்பு நிலத்தில் குப்பை கொட்டப்படுவது குறித்து பலமுறை புகார் அளித்தும், எந்த நடவடிக்கையும் இல்லை. சதுப்பு நிலங்களை பாதுகாக்க வேண்டிய சட்டங்கள், அவசியம் இருந்தும், அதிகாரிகள் இதனை கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனை அளிக்கிறது. இதுகுறித்து, வருவாய் துறை அதிகாரிகளிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் மீது காவல்துறையில் புகார் அளித்தால், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாத பட்சத்தில், சுற்றுச்சூழல் அமைப்புகளையும், பொதுமக்களையும் ஒருங்கிணைத்து விரைவில் போராட்டம் நடத்தப்படும்” என்றார்.

மணிமேகலை விருதுக்கு விண்ணப்பிக்க அழைப்பு

■ கோவை

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஊரகப் பகுதிகளில் சிறப்பாக செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், நகர்ப்புறங்களிலுள்ள சுய உதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஆகிய சமுதாய அமைப்புகள் 2024–25–ம் ஆண்டிற்கு மணிமேகலை விருது பெற விண்ணப்பிக்கலாம்.

உரிய விதிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் குழுக்களுக்கு மணிமேகலை விருது மற்றும் பரிசுத்தொகை வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்களை ஏப்ரல் 30–ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு ஊரகப் பகுதிகளாக இருப்பின் சம்மந்தப்பட்ட வட்டார இயக்க மேலாண்மை அலுவலகங்களிலும், நகர்ப்புறமாக இருப்பின் சமுதாய அமைப்பாளரையும் அணுகலாம்.

உயர்கல்வி துறையில் தமிழகம் முதலிடம் அமைச்சர் கோவி.செழியன் பெருமிதம்

■ ஊட்டி

உயர் கல்வித் துறையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.

ஊட்டி அரசு கலைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. கல்லூரி முதல்வர் நா.ராமலட்சுமி வரவேற்றார்.

அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். மாணவர்களுக்கு பட்டச்சான்றிதழ் வழங்கி உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது:

கல்விதான் உங்களை உயர்த்தும். ஒரு குடும்பத்தில் பெண் ஒருவர் படித்தால், அந்த சமூகம் உயரும், அதன் மூலம் நாடும் உயரும். இன்று பெண்கள் விண்வெளி வரை பயணம் செய்ய ஆரம்பித்து விட்டனர். பெண்கள் முன்னேற்றத்துக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உயர் கல்வித் துறையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் போன்ற திட்டங்கள் பெண்கள் படிப்புக்கு உறுதுணையாக உள்ளன. தமிழகத்திலேயே ஊட்டியில்தான் அதிக மாணவிகள் உதவித்தொகை பெற்று வருகின்றனர். தமிழக முதல்வரின் நடவடிக்கையால், ஆளுநரின் கடமை என்ன என்பது தற்போது வரையறுக்கப்பட்டுள்ளது, என்றார். விழாவில், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் பங்கேற்றனர்.

● ஊட்டி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மாணவிக்கு பட்டச் சான்றிதழ் வழங்கிய உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன். உடன், அரசு கொறடா கா.ராமச்சந்திரன். படம்: ஆர்.டி.சிவசங்கர்

கோடை கால விடுமுறை தொடங்கியபோதும்

கோவையில் புதிய விமான சேவை அறிவிப்புகள் இல்லை

இல.ராஜகோபால்

■ கோவை

கோவை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சென்னை, பெங்களூரு, டெல்லி, மும்பை உள்ளிட்ட உள்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும், ஷார்ஜா, சிங்கப்பூர், அபுதாபி ஆகிய வெளிநாடுகளுக்கும் விமான சேவை வழங்கப்படுகிறது. கோடை விடுமுறை தொடங்கியுள்ள நிலையில் கோவையில் இருந்து புதிய விமான சேவைகள் தொடங்கப்படாதது பயணிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து தென்னிந்திய மில்கள் சங்கத்தின் (சைமா) முன்னாள் தலைவர் ரவிசாம் கூறியதாவது:

கோவை விமான நிலையத்தில் தினமும் 35 விமானங்கள் இயக்கப்படுகின்றன. பயணிகள் எண்ணிக்கை 10 ஆயிரத்தை கடந்துள்ளது. தற்போது கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் பலர் வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்ல ஆயத்தமாகி வருகின்றனர். இதனால் எதிர்வரும் நாட்களில் விமான பயணிகள் எண்ணிக்கை மேலும் உயரும். நிலையான வளர்ச்சி காணப்படும் நிலையில் அதற்கேற்ப கோவையில் விமான சேவைகள் விரிவுபடுத்தப்படவில்லை.

கோவை - இலங்கை இடையே வாரத்தில் நான்கு நாட்கள் சேவை வழங்கப்பட்டு வந்தது. கரோனா தொற்று பரவல் மற்றும் அதைத்தொடர்ந்து அந்நாட்டில் நிலவிய பொருளாதார மந்த நிலை ஆகிய காரணங்களால் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்ட அந்த சேவை ஐந்து ஆண்டுகள் கடந்தும் மீண்டும் தொடங்கப்படவில்லை. இலங்கைக்கு விமான சேவை வழங்குவதால் இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் பயணிகளுக்கு மிகுந்த பயன் தரும்.

அதேபோல துபாய், பாங்காக், கோலாலம்பூர், தோகா போன்ற நகரங்களுக்கு நேரடி விமான சேவை வழங்க வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. சிங்கப்பூருக்கு தற்போது இரண்டு சேவைகள் வழங்கப்படுவது வரவேற்கத்தக்கது என்ற போதும், நேரத்தை மாற்றியமைக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். அதிகாலை நேரங்களில் இறக்கிவிடப்படுவதால் மதியம் வரை ஓட்டல்களில் அறை கிடைக்காமல் பயணிகள் அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கோவை விமான நிலையத்தில் விரிவாக்க திட்ட பணிகளை விரைந்து தொடங்கவும், விமான சேவைகளை அதிகரிக்கவும் மத்திய அரசு உதவ வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வால்பாறை ரொட்டிக்கடையில்

சிறுத்தையை கண்காணிக்க நவீன கேமரா பொருத்தம்

■ வால்பாறை

வால்பாறை ரொட்டிக்கடை பகுதியில் திரியும் சிறுத்தையை கண்காணிக்க, அந்தப்பகுதியில் வனத்துறையினர் நவீன கேமரா பொருத்தி கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோவை மாவட்டம் வால்பாறை அடுத்துள்ள ரொட்டிக்கடை பகுதியை சேர்ந்த செல்வக்குமார் என்பவரின் வீட்டின் முன்பு அவரது குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது புதரில் மறைந்திருந்த சிறுத்தை குழந்தைகளை நோக்கி பதுங்கியபடி வந்தது. இதைக் கண்ட வளர்ப்பு நாய் குரைத்ததும், குழந்தைகள் வீட்டுக்குள் ஓடி உயிர் தப்பினர். சிறுத்தை புதருக்குள் சென்று மறைந்தது. இந்த சம்பவம் அவரது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது.

இதுகுறித்து தகவலறிந்த வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று கேமராவை பொருத்தி, சிறுத்தையை கண்காணித்து வருகின்றனர். வனத்துறையினர் கூறும் போது, “ரொட்டிக்கடை பகுதியில் சிறுத்தை நடந்து வந்த கால் தடத்தை ஆய்வு செய்த பின்பு, அந்த பகுதியில் ஏ.ஐ. தொழில்நுட்பத்துடன் கூடிய கேமரா பொருத்தப்பட்டுள்ளது.

சிறுத்தை வரும் போது படம் பிடிப்பதுடன், அலாரமும் அடிக்கும். அதன் வாயிலாக பொது மக்களும் எச்சரிக்கையாக இருக்கலாம். சிறுத்தை நடமாடும் பகுதியில் மாலை நேரங்களில் குழந்தைகள் வெளியில் விளையாடுவதை தவிர்க்க வேண்டும்” என்றனர்.

● வால்பாறை ரொட்டிக்கடை பகுதியில் சிறுத்தையின் நடமாட்டத்தை கண்காணிக்க வனத்துறையினர் பொருத்தி உள்ள ஏ.ஐ. தொழில் நுட்பத்துடன் கூடிய கேமரா.

siva.kumar.v@hindutamil.co.in

துணை சுகாதார நிலையம் அமைக்க கோரிக்கை

■ வால்பாறை

வால்பாறையில் இருந்து 14 கி.மீ. தொலைவில் கவர்க்கல் எஸ்டேட்டும், அங்கிருந்து 10 கி.மீ. தொலைவில் சக்தி-தலநார் எஸ்டேட்டும் அமைந்துள்ளன. இதை சுற்றிலும் 10-க்கும் மேற்பட்ட சிறிய தேயிலை எஸ்டேட்கள் உள்ளன. இங்குள்ள கவர்க்கல், சக்தி-தலநார் எஸ்டேட்களில் 2000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இப்பகுதியில், அரசு துணை ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாததால், இங்கு வசிக்கும் மக்கள் சாதாரண காய்ச்சல், சளி நோய்களுக்கு சிகிச்சை பெற 24 கி.மீ. தொலைவில் உள்ள வால்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர்.

இது குறித்து கவர்க்கல் பகுதி பொதுமக்கள் கூறும் போது, “வால்பாறை நகராட்சிக்கு உட்பட்ட கவர்க்கல் எஸ்டேட் பகுதியை சுற்றிலும், சக்தி-தலநார் பிளண்டிவேலி, மகாவீர், லில்லி, மகாலட்சுமி உட்பட பல்வேறு எஸ்டேட்கள் உள்ளன. இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எவ்வித அடிப்படை வசதியும் இல்லை. போதிய பேருந்து வசதி கூட இல்லாத நிலையில், கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இப்பகுதியில் போதிய மருத்துவ வசதியும் இல்லை. தொழிலாளர்களின் நலன் கருதி, வால்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில், கவர்க்கல் பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்” என்றனர்.

UNITY
யூனிட்டி ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்
கார்ப்பரேட் அலுவலகம்: செண்ட்ரம் ஹவுஸ், வித்யாநகரி மார்க், கலினா, சாண்டாக்ரூஸ் (E), மும்பை-400098.

சுவாதீன அறிவிப்பு
[விதி 8(1)] இணைப்பு-IV (அசையா சொத்திற்காக)

கீழே கையொப்பமிட்டுள்ள **யூனிட்டி ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கம் பாதுகாப்பு வட்டி சட்டம், 2002 மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002-ன் விதி 3-ன்படி பிரிவு 13(12)-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, **15.01.2025** கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டது மற்றும் **18.01.2025** அன்று செய்திதாளில் வெளியிடப்பட்டது, கடன்தாரர்/இணை-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் **1) M/s. Sri Anuubhavi Impex ("கடன்தாரர்")** முகவரி கதவு எண். 2/501, அக்ரஹாரா பெரியபாளையம், ஊத்துக்குளி சாலை, பிரிமியர் ரோட்டரி மில் அருகில், சர்கார் பெரியபாளையம், திருப்பூர் 641607, தமிழ்நாடு, மேலும் : 12 கதிர் லேஅவுட், காங்கேயம் சாலை, திருப்பூர்-641604. **2) திரு. முருகநாதன் ராமசாமி ("ஜாமீன்தாரர்/பங்குதாரர்/அடமானதாரர்")** முகவரி C/o. ராமசாமி தேவர், த/பெ. ராமசாமி தேவர், 12 கதிர் லேஅவுட், காங்கேயம் சாலை, திருப்பூர் - 641604. மேலும் : 2/501, அக்ரஹானா பெரியபாளையம், ஊத்துக்குளி சாலை, பிரிமியர் ரோட்டரி மில் அருகில், சர்கார் பெரியபாளையம், திருப்பூர் - 641607, தமிழ்நாடு. **3) திருமதி. தேவமணி தேவி ("பங்குதாரர்/ஜாமீன்தாரர்")** முகவரி : C/o. திரு. முருகநாதன், க/பெ. திரு. முருகநாதன், 12 கதிர் லேஅவுட், காங்கேயம் சாலை, திருப்பூர் - 641604 மற்றும் **4) E ஜென்சி டிவைன் நிம்ஃபா ("ஜாமீன்தாரர்/பங்குதாரர்")** முகவரி : D/o. எட்வர்டு சகாயம், 247/3எப், புளியமர தோட்டம், வடுகபாளியாளையம், மங்கலம், திருப்பூர், தமிழ்நாடு 641663 மற்றும் மேலும் : 2/501, அக்ரஹாரனா பெரியபாளையம், ஊத்துக்குளி சாலை, பிரிமியர் ரோட்டரி மில் அருகில், சர்கார் பெரியபாளையம், திருப்பூர் 641607, தமிழ்நாடு ஆகியோருக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள **04.01.2025** அன்றைய நிலுவை தொகை **ரூ.4,94,06,340.50/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றி நான்கு இலட்சத்து ஆறாயிரத்து முன்னூற்றி நாற்பது மற்றும் பைசா ஐம்பது மட்டும்)** மற்றும் அத்துடன் வட்டி, வருங்காக வட்டி, கட்டணங்கள், செலவுகள், இதர சேர்த்து அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள்/பங்குதாரர்கள்/அடமானதாரர்கள் தொகை செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள்/ பங்குதாரர்கள்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13 துணைபிரிவு (4)-ன்கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **யூனிட்டி ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **09.04.2025** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள்/ பங்குதாரர்கள்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான அடமான சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது **யூனிட்டி ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**-க்கு செலுத்தப்பட வேண்டிய **04.01.2025** அன்றைய பாக்கித் தொகை **ரூ.4,94,06,340.50/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றி நான்கு இலட்சத்து ஆறாயிரத்து முன்னூற்றி நாற்பது மற்றும் பைசா ஐம்பது மட்டும்)** அத்துடன் ஒப்பந்த விகிதம்(கள்)-ன் திரட்டப்பட்ட வட்டி/பெறப்படாத வட்டி அத்துடன் தற்செயலான செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள், இதர இறுதி தொகை செலுத்தும் நாள் வரை உள்ளவை உட்பட சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டம் 13-ன் பிரிவு 8 ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்துக்கள் விவரம்

வ. எண்.	அடமான சொத்துக்கள்	உரிமையாளர் & அடமான வைத்தவர்
1	**அயிட்டம் எண்.1 :** காலி நிலம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், மொரட்டுபாளையம், திருப்பூர், நிலம் அளவுகள் 13.84 சென்ட்ஸ், சர்வே எண். 85/1ஏ1 (தற்போது துணைபிரிவு சர்வே எண். 85/1ஏ1சி)-க்குட்பட்ட மொரட்டுபாளையம் கிராமம், திருப்பூர் வடக்கு தாலுகா, திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கில் : ஆர்.எஸ்.எண். 85/1ஏ1 திரு. பொன்னுசாமி அவர்களுக்கு சொந்தமானது, தெற்கில் : அயிட்டம் எண்.3 ஆர்.எஸ்.எண். 85/2ஏ, கிழக்கில் : அயிட்டம் எண்.1 ஆர்.எஸ்.எண். 85/1பி, மேற்கில் : ஆர்.எஸ்.எண். 85/1ஏ1 திரு. பொன்னுசாமி அவர்களுக்கு சொந்தமானது.	திரு. முருகநாதன் ராமசாமி
	அயிட்டம் எண்.2 : காலி நிலம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், மொரட்டுபாளையம், திருப்பூர், நிலம் அளவுகள் 44 சென்ட்ஸ், சர்வே எண். 85/1பி (தற்போது துணைபிரிவு சர்வே எண். 85/1பி1)-க்குட்பட்ட மொரட்டுபாளையம் கிராமம், திருப்பூர் வடக்கு தாலுகா, திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கில் : ஆர்.எஸ்.எண். 85/1பி திரு. பொன்னுசாமி அவர்களுக்கு சொந்தமானது, தெற்கில் : அயிட்டம் எண்.3 ஆர்.எஸ்.எண். 85/2ஏ, கிழக்கில் : 30 அடி அகல தெற்கு வடக்கு பொது பாதை, மேற்கில் : அயிட்டம் எண். 1.	திரு. முருகநாதன் ராமசாமி
	அயிட்டம் எண்.3 : காலி நிலம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், மொரட்டுபாளையம், திருப்பூர், நிலம் அளவுகள் 1 ஏக்கர் 43 சென்ட்ஸ், சர்வே எண். 85/1ஏ-க்குட்பட்ட மொரட்டுபாளையம் கிராமம், திருப்பூர் வடக்கு தாலுகா, திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கில் : ஆர்.எஸ்.எண். 85/1ஏ1, ஆர்.எஸ்.எண். 85/1பி, தெற்கில் : ஆர்.எஸ்.எண். 85/2பி, ஆர்.எஸ்.எண்.86, ஆர்.எஸ்.எண். 85/2சி, கிழக்கில் : 30 அடி அகல தெற்கு வடக்கு பொது பாதை, மேற்கில் : ஆர்.எஸ்.எண். 88. ஊத்துக்குளி சார்-பதிவு மாவட்டம் மற்றும் திருப்பூர் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.	திரு. முருகநாதன் ராமசாமி

நாள் : 09.04.2025
இடம் : திருப்பூர், தமிழ்நாடு
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
யூனிட்டி ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம்-5
ம.அ.5.ந.க.எண்.இ1 / RPM/229/MLA Fund/2025
மின்னணு ஒப்பம் மற்றும் ஏலம் அறிவிப்பு (Two Cover)
மண்டலம் - 5, பகுதி - 12 கோட்டம் - 52ல் கல்லறை சாலையில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தில் மூன்றாம் தளம் கட்டும் பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகின்றன. (Royapuram MLA Fund)
பணிக்கான மதிப்பு ரூ. 91,59,000/- ஆகும்.
ஒப்பந்ததாரர்கள் https://tntenders.gov.in இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின்னணு ஒப்பந்தத்தில் நாள் 25.04.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் பங்கேற்கலாம். 28.04.2025 அன்று பிற்பகல் 3.30 மணிக்குள் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.
செ.ம.தொ.இ / 1517 / ஒப்பந்தப்புள்ளி / 2025
மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
பங்களிப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.
வரி விளம்பரங்கள்
பொது
விற்பனை

EASYTECH
CCTV CAMERA
எங்கிருந்தும் உங்கள் வீடு / அலுவலகத்தை மொபைலில் பார்க்கலாம்

AN ISO 9001-2008 COMPANY
இலவச டெமோவிற்கு அழைக்கவும்
கோயம்புத்தூர்
74488 88902
திருப்பூர்
74488 88903
www.easytechcctv.com

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)
பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழிக்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	09.04.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	45989420002709 45989420001808 & 45989410001070	1) திரு. சரவணன் R, 2) திருமதி. மாரியம்மாள் சரவணன்	04.09.2024	16.11.2024	**ரூ.14,21,551.70** (ரூபாய் பதினாறும் இலட்சத்து இருபத்தி ஒராயிரத்து ஐநூற்றி ஐம்பத்தி ஒன்று மற்றும் பைசா எழுபது மட்டும்)	23.04.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	**ரூ.9,16,800/-** (ரூபாய் ஒன்பது இலட்சத்து பதினாறாயிரத்து எண்ணூறு மட்டும்)	**ரூ.91,700/-** (ரூபாய் தொண்ணூற்றி ஒராயிரத்து எழுநூறு மட்டும்)	29.04.2025 @ 03.00 PM	28.04.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.
	பாதுகாப்பு சொத்தின் விவரம் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கிணத்துகடவு சார் பதிவு மாவட்டம், மதுக்கரை தாலுகா, மயிலேரிபாளையம் கிராமம், பட்டா எண்.114, 85, எஸ்.எப்.எண். 22/1 தற்போது துணை பிரிவு எஸ்.எப். எண்.22/1பி புஞ்சை ஏக்கர் 1.00 மற்றும் எஸ்.எப். எண்.23 புஞ்சை ஏக்கர் 3.69 மொத்த புஞ்சை ஏக்கர் 4.69 நிலம் "ராயல் அவென்யூ பேஸ் 1 மற்றும் பேஸ் 2" என்ற பெயரில் லேஅவுட்டாக மாற்றப்பட்டது மற்றும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டம